# இவளின் ஏக்கம்



புவஸ்ரினா.ம

# இவளின் ஏக்கம்



**புவஸ்ரினா.மெ**
யா/வேம்படி மகளிர் உயர்தர
பாடசாலை மாணவி

நூல் விபரம் - இவளின் ஏக்கம்

பொருள் ஆக்கம் - கவிதை தொகுப்பு

ஆசிரியர் - புவஸ்ரினா மெய்யழகன்

சமர்ப்பணம் - யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலைக்கு இந்நூல் சமர்ப்பணம்

முதற்பதிவு - 2016.04.29

அச்சுப்பதிப்பு - மதி கலர்ஸ் பிறிண்டர்ஸ்

நல்லூர்.

0212229285

பக்கம் - 1-40

விலை - 110/=

# அதிபரின் ஆசியுரை

யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலையில் உயர்தர கலைப்பிரிவு 2016ல் கல்வி பயிலும் மாணவியான புவஸ்ரினா மெய்யழகன் வெளியிடும் கன்னி முயற்சியான "இவளின் ஏக்கம்" எனும் கவிதை தொகுப்பு நூல் வெளியீட்டு முயற்சிக்கு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சியடைகின்றேன். இன்றைய நவீன உலகினில் எழுத்தாற்றற் கலை குறைவடைந்து செல்லும் இவ் வேளையில் இம் மாணவியின் முயற்சி பாராட்ட வேண்டிய ஒன்றாகும்.

இத் தொகுப்பின் மூலம் இம் மாணவி எல்லா மாணவர்களிற்கும் எடுத்துக்காட்டாக இருக்கவும் இது போன்று பல தொகுப்புக்களை வெளியிடவும் வாழ்த்தி ஆசி கூறுவதுடன், "இவளின் ஏக்கம்" எனும் தொகுப்பு உயர்தர மன்றத்தின் செயற்பாடாக இவ்வாக்கம் 2016.04.29 அன்று வெளியிடுவதையிட்டு மன்றத் தலைவியான இ.கஜனி, செயலாளர் ர.அபிராமி ஆசிரியர்களான திருமதி.சா.வீரசிங்கம், திருமதி.ஜீ.பி.சுரேந்திரன் அவர்களிற்கும் ஏனைய உதவி வழங்கிய ஆசிரியர்களிற்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கின்றோம்.

இவ் மாணவியின் ஆக்கங்கள் கண்டு மகிழ்ச்சியும் பெருமையும் அடைவதுடன் மென்மேலும் பல ஆக்கங்களை தொடர்ந்து வெளியிட்டு எதிர்காலத்தில் சிறந்த கவிஞராக திகழ வாழ்த்துகின்றேன்.

**திருமதி.வேணுகா சண்முகரட்ணம்**
**யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை**
**அதிபர்**

## நற் கவிதைகள் புனைந்த நல்லாளுக்கு எம் இதயம் கனிந்த நல் வாழ்த்துக்கள்

"கல்வி" என்னும் மூன்றெழுத்து என்றும் மிளிர்ந்திட
'கவிதை" என்னும் மூன்றெழுத்து மூலம் ஆக்கி எமக்கு
"அறிவு" என்னும் மூன்றெழுத்து புகட்டி மலரும்
"அம்மை" என்னும் மூன்றெழுத்துடையாய் நீவிர் என்றும்
வாழி!

"பெண்மை" என்னும் மூன்றெழுத்தை அணிகலனாகக்
கொண்டு
"நினைவு" என்னும் மூன்றெழுத்தை என்றும் விளக்கி
"மரபு" என்னும் மூன்றெழுத்துக் கவிதை மூலம் எமக்கு
நல்கிய
"நங்கை" என்னும் மூன்றெழுத்துடையாய் நீவிர் என்றும்
வாழி!

"எதுகை" என்னும் மூன்றெழுத்துடன் மோனை சேர
"எழில்" என்னும் மூன்றெழுத்து உன் கவிதையில் என்றும்
துலங்க
"பள்ளி" என்னும் மூன்றெழுத்தில் கற்கும் மாணவச் சமூகம்
"பார்" போற்று வாழ்ந்திட வழிகாட்டிய வேம்படியின்
புதல்வியே
நீவிர் என்றும் வாழி! வாழி!!

செல்வி.த.புண்ணியமூர்த்தி
பகுதித்தலைவர்
(கலை, வர்த்தகப் பிரிவு)

# ஆசியுரை

பள்ளி மாணவி "இவளின் ஏக்கங்களை"

படிமுறையாய் கோர்த்து

செய்த கவிநூல்..

பல்துறை பண்பாளராய் பங்குடன்

வளர வாழ்த்துக்கள் பகிர்கின்றேன்.

சிறுமி உன் கன்னிநூல்

நல்ல கனிவுடன் இலங்கி நட்பினை

பல பெற்று கவி உலகின் ராணியாய்

வாழ வாழ்த்துகின்றேன்....................

வரன் முறை பிழையாது வல்லமைகள்

பல பெற்று நல்லதொரு கவித்தாயினியாய் மிளிர்க.

ந.ஜெகதீபன்
ஊடக ஆசிரியர்

# என்னுள்ளத்திலிருந்து...

எதையாவது சாதித்திட வேண்டும் என்று துடிக்கும் இன்றைய இளைய சமூகத்தின் மத்தியில் நான் வாழும் சமூகத்தில் எனக்கு ஏற்பட்ட தாக்கத்தை காகிதங்களில் கிறுக்கிட அவை கவிதைகளாயின. அவ்வாறான கிறுக்கல்களை தொகுப்பாக்கி நான் வெளியிடும் எனது கன்னி முயற்சியான “இவளின் ஏக்கம்” எனும் கவிதை தொகுப்பை உங்கள் கரங்களில் தருவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

கருவறையிலிருந்து வந்த நொடி முதல் கல்லறையில் அடக்கப்படுவதற்குள் உள்ள சிறு பொழுதிற்குள் எதையாவது சாதித்திட வேண்டும் எனத் துடிக்கின்றான் மனிதன். இலக்கை அடையும் முன் இறப்பு தழுவி விடுகின்றது. ஆனால் இங்கு இலட்சியக்கனவு மட்டும் நிஜமில்லா நிழலாக ஊசலாடுகின்றது.

நாம் எதை செய்வதாயினும் பிறருக்கு பயன் கிடைக்கும்வகையில் செய்ய வேண்டும் என்பதை உணர்ந்து கவிதையை ஓர் ஆயுதமாக கொண்டு யாவருக்கும் பிடித்து புரிந்துகொள்ளும் வகையில் கவி கொடுத்திட அது அவர்களின் மனதில் விதைத்து தைத்திட வேண்டும் என்பதனால் என் மாணவப் பராயத்தில் மனம் திறந்து “இவளின் ஏக்கம்” எனும் தொகுப்பினூடாக எனது உள்ளத்து உணர்வுகளை உங்கள் கரத்தில் தவழ விடுகின்றேன்.

அந்தவகையில் இத் தொகுப்பை வெளியிட ஆசிர்வதித்த இறைவனிற்கும் அனுமதியளித்த அதிபர் திருமதி.வேணுகா சண்முகரட்ணம் அவர்களிற்கும், ஆதரித்து உதவி உற்சாகப்படுத்திய பெற்றோரிற்கும், உற வினருக்கும், நண்பர்களிற்கும், சிறப்பாக 2016 கலைப் பிரிவு மாணவர்களிற்கும், கலைகளிற்கு சிறந்த களம் பாட சாலையே என என்னை இத் தொகுப்பை வெளியிட தூண்டிய ஆசிரியரான திரு.ந.ஜெகதீபன் அவர்களிற்கும் இவ் தொகுப்பை உயர்தர மன்றத்தினூடாக வெளியிட அனுமதியளித்த ஆசிரியர்களான திருமதி சா.வீரசிங்கம், திருமதி.ஜீ.பி.சுரேந்திரன், அவர்களிற்கும் ஏனைய உதவி வழங்கிய ஆசிரியர்களிற்கும் நூலிற்கு அட்டை படம் வடிவமைத்து தந்த ஆசிரியர் திரு.பிலிப்றோய் அவர் களிற்கும் நூலை அழகுற அச்சேற்றி தந்த மதி கலர்ஸ் நிறுவனத்திற்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**ம.புவஸ்ரினா**
**2016 கலைப்பிரிவு மாணவி**

# மகுடத்தரசி

18ம் நூற்றாண்டில் பனித்துளி நீர் போல்
கானகத்தில் வந்த நீர் ! இன்று
பராக்கிரம சமுத்திரம் போல்
பரிணாமம் அடைந்து விட்டது

இங்கிலாந்துக்கு அடுத்ததாக
இந்து சமுத்திரத்தின் முத்தான
இலங்கை தேசத்தில் தோன்றிய
பெண்கள் பாடசாலை

பீற்றர் பேர்சிவலால் வீறு கொண்டு
எழுந்த வேம்படித் தாய்
வேரூன்றி விட்டாள் விண் தொடுமளவு
விசையொடு வித்தகர் தமை உருவாக்கிய தாய்

ஆரம்ப நிலையில் ஐந்து மாணவியர்
இன்றோ அவர் தொகை பன்மடங்காகி
இரண்டாயிரத்தையும் எட்டியதாக
எழில்தகு சாதனைப் பெண்களைப் படைக்கின்ற
மகளிர் பாடசாலை

பாரதி கனவும் பேர்சிவலின் உழைப்பும்
பாரினில் உயர்புறு பெண்களைப் படைத்து
சரியதை செய் எனும் மகுடம் மூலம்
மகுடம் சூடினர் மங்கையர்

ஆண்டுகள் கடந்தாலும் இளமையாய்
இருக்கும் வேம்படித் தாயே
இன்னும் சாதனையாளரை உருவாக்கி
இன்னும் பல நூற்றாண்டு வாழ்ந்திடு தாயே



# இன்றும்

கனவை கானலாக்குவது போல்
பெண்ணுக்கு என்ன கல்வி என்னும்
இழக்காரப் பேச்சு இன்றும்

படித்தது போதும் எனக் கூறும் பெற்றோர் ஒரு புறம்
பெண்களுக்கு அதிகம் படிப்பு தேவையில்லை
படித்தது போதும் மணம் முடித்துக் கொடு
எனக் கூறும் சமுதாயம் மறு புறம்

பாரதியின் கனவு புதைக்கப்படுகிறது
பாலகியின் கல்வி கானல் நீராகின்றது



# வாழ்க்கை

அடைவது அனைத்தும்
வெற்றிகளும் இல்லை
இழப்பது அனைத்தும்
தோல்விகளும் இல்லை
நடக்கும் அனைத்தும்
காலத்தின் கட்டாயமே
வரலாறு படைத்தவர்களின்
வாழ்க்கையை புரட்டிப்பார்
கடந்து வந்திருப்பார்கள்
கஷ்டங்களையும் இஷ்டங்களாக






புவஸ்ரினா.ஜெ

# சுதந்திரம் எங்கே?

சிறகுகளை கொடுத்தான்
இறைவன்
அதன் இறைமைக்காக;
சிறகுகளை வெட்டி கூண்டில்
அடைத்து விட்டு
தனக்கு இறைமை இல்லை
என்கிறான் மனிதன்
உணர்வுகளை எரித்துவிட்டு
உண்மை நிலை மறந்து விட்டு
உயிரற்ற ஜடமாய் மாறுகின்ற மனிதம்



# வீரர்கள்

சுய நலமின்றி தம் நாட்டு மக்களுக்காக
தம் உயிரை கொடுக்கும் மாபெரும் மனிதர்கள்

தேசம் காத்திட தேய்கின்ற பிறை இவர்கள்
உறவுகளை பிரிந்து பருவ மாற்றங்களிலும்
அன்புடன் வாழ்ந்து வரும் மனிதர்கள்

மனித மாண்பை காக்கவும்
மக்கள் மகிழ்ந்து வாழவும்
தன்னுயிர் கொடுக்கும் வீரர்கள்

தம் தேசப் பற்றினால் வீர மரணத்தையும்
புறமுதுகிட்டு ஓடாமல் நெஞ்சை காட்டி
தேசம் காக்கும் தேசாதிபதிகள்

தன் உறவுகளை பிரிந்து
எல்லைகளில் எம் உறவுகளாகும்
தேசத்து மாவீரர்கள்





புவஸ்ரினா.மெ

# கரமதில்

சொர்க்க பூமிக்காய் தொடங்கியது
ஒரு போராட்டம் இழந்ததோ கோடி உயிர்களை
மடிந்தது தாய் மண்ணில் தனிப் பிணமாய்

நினைத்து பார்க்க முடியா துன்ப வாழ்வை
துனையாக்கி துவண்ட நெஞ்சங்கள்

கவிஞர்களையும் கணை தூக்க வைத்தது
ஒரு போராட்டம்
குமிழ் முனைகளால் கவிதை எழுதிய கரங்களோ
போர் முனையில் கணைகளோடு எழுந்தது


போராட்டம் எனும் நீரோட்டமதை
முடிக்க நினைத்தவர்கள்
முற்று புள்ளி வைத்ததாக முழக்கம்
இடுகின்றனர் பாரினில்
பாவம் பரிதவித்து நிற்பதோ
ஒன்றும் அறியா அப்பாவி மக்கள்






# மனம்

அலைகள் முத்தமிடும்
கடற்கரை மணல்கள்
அலைந்து மோதும்
கல்லூரி கனாக்கள்
கலைந்து சேரும் முகில்கள்
பிரிந்து சேரும் நட்புக்கள்
முட்கம்பிகளுக்குள் முடக்கப்பட்ட
சுதந்திரம்
அவ் சுதந்திரத்தை சுவீகரிக்க
எண்ணும் மனம்



# நட்பு

ஜனனத்தைப் பார்க்கின்றது
ஜாதியைப் பார்க்கவில்லை
மனதை பார்க்கின்றது
மதத்தைப் பார்க்கவில்லை
இதயத்தைப் பார்க்கின்றது
இனத்தைப் பார்க்கவில்லை



# புலம் பெயர் உறவுகள்

புலம்புகின்றனர் புலம்பெயர் உறவுகள்
உறவுகள் இங்கே உணர்வுகள் அங்கே

தாய் மண்ணை விட்டு உயிரினை காக்க
கண்கொண்ட உறவுகளை விட்டு விட்டு
கடல் கடந்து; கண்டிடாத கண்டங்களில்
கரைகின்ற உள்ளங்கள்

மண் வாசணையை மறக்க முடியுமா!
பாச உறவுகளை பார்க்கமுடியுமா!
என்று பல கேள்வியின் எதிர்பார்ப்புடன்
பதிந்து கிடக்கின்றது பசுமை நினைவுகள்

தாம் வாழும் நாட்டில் வளமைகள் கோடிகள்
இருந்தாலும்;
செந்தமிழில் அம்மா என்று அழைத்திட
ஆசைப்படுகின்றது உள்ளம்

பிரிவு உலக நியதி
மாற்றம் மனித தேடல்

கடிகார முட்களோடு போராடுகின்றனர்
கண் இமைக்கும் பொழுதிலும்
கனவிலும் தாய் நாட்டின் நினைவுகள் துடிப்பதனால்

சூரிய உதயம் சுட்டெரிக்கின்றது
கிட்டி புல் ஞாபகத்தால்
வெண்ணிலா எரிக்கின்றது
அம்மா அதைக்காட்டி ஊட்டிய சோறால்
விண்மீன் கூட விழியில் கண்ணீர் சொரிகின்றது
நண்பர்களை எண்ணியதால்
கடலலை அரிக்கும் கடற்கரை மணல் போல்
உயிரற்ற உடல் போல் உறவுகள்

இங்கே நிழல் போல்
நினைவுகள் மட்டும் நிரந்தரம்

புலம்பெயர் உறவுகளின் ஒரே புலம்பல்
தாய் மண்ணில் தலை சாய்ப்பதே
கனவுகள் உடைந்து
நிஜமதில் நிகழ்ந்திடு!



# புகைப்படம்

பழைய நினைவுகளை
பசுமையாக எண்ணவைத்து மனம்தனில்;
மீட்டிப் பார்க்க வைக்கும் பொக்கிஷம் புகைப்படம்

காலங்கள் பருவம் போல்
மாறிக் கொண்டே இருக்கலாம்
பாசங்களும் பழைய நினைவுகளும் மாறாது
அதை மீண்டும் பார்த்திடலாம்
புகைப்படத்தில்

இரவு தன்னில் விண்மீன்கள்
விரைந்து ஓடலாம்
இளம் தென்றல் இதயம் வருடிட
இன்ப நினைவுகளையும், இனிய தருணங்களையும்
செதுக்கிய சின்னமாக
வரைந்த ஓவியமாக
பார்த்திடலாம் புகைப்படத்தில்


# உயிரோட்டம்

உயிர் வாழ்கின்றான் இறந்த பின்பும்
ஓர் சிறந்த கலைஞன்
உயிரோட்டமான படைப்புக்களால்

கலைஞன் என்பவன் தடைகளை
படிகல்லாக்கி சிகரம் அடைபவன்

அவன் வாழ்ந்து கொண்டே இருப்பான்
என்பதை அவன் படைப்பு
உயிர் ஊட்டிக் கொண்டேயிருக்கும்

திரைகளில் உணர்வுகள்
மறைக்கப்பட்டாலும்
உயிருட்டுகின்றது உன்னத படைப்பு
உணர்வுகளாக



# தொ(ல்)லை பேசி

தொலைபேசி எனும் ஒரு
நவீன சாதனம்
தொலைத்து விட்டது சுதந்திரத்தை

தொலைபேசியை தொலைவில்
வைத்து விட்டு தொலைத்த
சமூதாயத்தை மீட்டெடுப்போம்


# வன்முறை

மனிதா! நீ எங்கே செல்கின்றாய்
என்ன செய்கின்றாய்
மனிதத்தை மதிக்கின்றாயா இல்லை
வன்முறை மூலம் மனிதர்களை அழிக்கின்றாயா?

உயிரை எடுக்கும் உரிமையை
உனக்கு தந்தது யார்
தாயின் வலியை உணர்ந்தாயா?
உயிராக இருக்கும் குழந்தையை
உயர்ந்த நல் மனிதனாக வளர்த்தாயா?

இறைவன் கொடுக்கும் உயிரை
எடுக்க நீ யார்?
வன்முறையால் வஸ்திரம் ஏந்தி
மனித மாண்பின்றி மனிதரை அழிக்கின்றாயே

ஒன்றை மட்டும் நினைவில் வை
நீயும் கருவறையிலிருந்து வந்தாய்
கல்லறையில் புதைக்கப்படுவாய் என்பதை



# பெண்ணியம்

பெண்களை கைம் பொம்மையாக்கி
விளையாடுகின்றனர்

பாதகர்களின் கையில் பாவையா?
கயவர்களின் கையில் கைபொம்மையா?

மங்கையர் மனமுடைந்து
கடிகார முட்களோடு போராடுகின்றனர்
கண் இமைக்கும் பொழுதிலும்

கண்ணகி வாழ்ந்த நாட்டில்
கற்புக்கு விலைபேசுகின்றனர் கயவர்கள்

உணர்வுகளை எரித்துவிட்டு
உண்மை நிலை மறந்துவிட்டு
உயிரற்ற ஜடமாய் மாறுகின்ற மனிதம்

உண்மை நிலை அறிந்தும்
உணர்வுகளுக்கு வரம்பிட்டு
ஊமையாய் கிடக்கின்றனர் மனிதர்கள்

# பிரக்ஞை இல்லாத வார்த்தை

நெருப்பு இல்லை
வெந்து விட்டேன்
கணைகள் இல்லை
குண்டு துளைத்து விட்டது
தூக்கம் இல்லை
இரவு முடிந்து விட்டது
விடியல் இல்லை
இருள் பற்றிக் கொண்டது
உணர்வில்லா வார்த்தைகள்
உயிரைக் கொல்கிறது





# அன்பு செய்

வழியில் தொலைகின்றது
வசந்தம்
விழியில் விரைகின்றது
கண்ணீர்த் துளிகள்
சுதந்திரக் காற்றே!
கொஞ்சம் வீசிச் செல்வாயா
உன்னை சுவாசிக்க
ஆசைப்படுகின்றது என் உள்ளம்





புவஸ்ரினா.மெ

# குமிழ் முனை

குமிழ் முனைகள் முறைக்கின்றன
காகிதங்கள் கரைய நினைக்கின்றது
உணர்வில்லா வரிகளினால்

உறக்கத்திலும் விழிகள் விழிக்கின்றன
விரல்கள் பேனா முனைகளை
ஆறாம் விரலாய் மாற்றி
வரைய நினைக்கின்றது
உணர்வுகளை
கவிதைத் துளிகளாய் காகிதங்களில்


# வேகம்

காலங்கள் கரைகின்றது
நேரங்கள் சுழல்கின்றது
நிழலில்லா தடையங்கள்
நிஜமில்லா வாழ்க்கையில்
தொடரும் முடிவில்லாப் பயணங்கள்
கடிகார முட்களோடு
ஓர் போராட்டம்
காலத்தின் வேகத்தால்



# மழலை மொழி

மண்பேசும் சரித்திரங்களுக்கு
இணையானது - மழலையின் மொழி
இலக்கணத்தை கூட மறந்து விடலாம்
இன்பம் தரும் மழலையின்
புன்னகையோர் இலக்கியமாகிவிடும்
கண்ணை சிமிட்டும் மழலையை கண்டதும்
கள்வன்கூட கர்ணனாக மாறிடுவான்



# இவளின் ஏக்கம்

மூட மறுக்கும் விழிகள்
தேட நினைக்கின்றதோர் விடியலை

காலங்கள் கரைந்து கொண்டிருக்கின்றது
நேரங்கள் சுழன்று கொண்டிருக்கின்றது
ஆதவனும் அஸ்தமனிக்க காத்திருகின்றான்
காரிருளும் கானகத்தை மூடிக்கொள்ள

என்னவர் என்னும் வரவில்லை
என்று பரிதவிக்கும் உள்ளம்
பரிதவிப்பை படைத்தவனும்
அறியானோ அடியவளை

நம் வாழ்வில் இன்பத்தை பார்த்தது கிடையாது
துன்பத்தையே நிழலாக கொண்டு வாழ்ந்தோம்
ஒரு புறம் மண் குடிசை வாழ்வும்
மறுபுறம் மனிதனை புதைக்கும்
படுகுழி போரும்

இந்த சிறுகுடிசையில் தூங்கும் குழந்தையின்
பசி போக்க - பயணித்தவரின்
பயணம் இன்னும் முடியவில்லையே
என்னவரின் வருகை எங்கே?

மீன் பிடிக்கச் சென்றவருக்கு என்ன நடந்ததோ
குண்டுகள் துளைத்ததோ அல்லது
கடலன்னையின் சீற்றமோ என்னவரின்
வருகைக்கு தடைக்கல்லாக உள்ளது.

பதறுகிறது இதயம் பயம் சூழ்ந்த இருளில்
என்னவரின் வரவின்மையை அறிந்த எவனொருவன்
எவ் நொடி மண் குடிசைக்குள்
மாயமாய் குதிப்பானோ?

என்னவர் எப்போது வருவார் என
ஏங்கும் உள்ளம்
அவரின் பாதங்களின் ஓசையாவது
கேட்டிட துடிக்கும் செவிகள்
ஏங்கும் விழிகளின் ஏக்கம் தனியாதோ!
ஏழைகளின் வாழ்வில் விடியல் கிடையாதோ!

வேலியையும் தாண்ட முடியாது
வேதனையும் தாங்க முடியாது
தன்னம் தனியே துடிக்கின்றேனே
என்னவரின் வருகைக்காய்

விழிகள் மூட மறுக்கின்றதே!
விடியலைத் தேட நினைக்கின்றதே

# நாளைய நமது தேசம்

தேசமாம் நம் இலங்கை தேசம்
ஜாதி, மதங்களை இனங்களை பிளந்து
ஒன்றாகிடும் நாளைய நமது தேசம்

வேற்றுமைகள் நீங்க ஒற்றுமைகள் சேர
பாசமாய் மாறி வாழ்ந்திடும்
நாளைய நமது தேசம்

சூரியனை சாட்சியாக்கி
சுதந்திரமாக வாழவைத்திடும் அனைவரையும்
நாளைய நமது தேசம்

மனிதனை மனிதன் மதித்து
சமத்துவத்தோடு சுதந்திரமாய் வாழ வைத்திடும்
நாளைய நமது தேசம்

வளங்களை பாதுகாத்து
வளமையுடன் வாழ வைத்திடும்
நாளைய நமது தேசம்


சீர்திருத்தங்களின் மூலம் நாட்டை சீராக்கி
யாப்புகள் மூலம் யாழிசைத்திட

நல்லாட்சி புரிந்திடும்
நாளைய நமது தேசம்
நல்லாட்சி மூலம் உலக நாடுகளை
நண்பராக்கி வல்லரசாகிவிடும்
நாளைய நமது தேசம்

குடிசைகள் மறைந்திட ஏற்றத் தாழ்வுகள்
ஒழிந்திட ஆதரவு இல்லங்களை
அழித்திட வைக்கும்
நாளைய நமது தேசம்

தேசங்களின் தேசாதிபதியாகி
மனித மாண்பை காத்திடும்
நாளைய நமது தேசம்

ஒரே இனம், ஒரே மதம்
ஒரே குரல் என்றிடும்
நாளைய நமது தேசம்



# ஈழத் தமிழினம்

எம் திருநாடாம் இலங்கை தேசம்
தித்திக்கும் தேனிலவும்
தீயாய் எரியும் கதிரவனும்
காலை, இரவு, பருவங்கள் என
எல்லாம் சுகமாய் இருந்தும்
சுமையென வாழும் தமிழர்கள்

ஆண்டாண்டு காலம் அடிமையாய்
வாழும் வாழ்க்கை
விடியலைத் தேடும் விழிகள்
தாய் மண் என நம்பும் மக்களை
தாங்க முடியாது காவு கொடுக்கின்றாள்
இயற்கை அன்னை

மூன்று தசாப்தங்கள் அழிந்தது
வேரின்றி வேற்றவராய்
யுத்தமெனும் யுகத்தில்

கடல்தாய் கரம் ஏற்றால் - எம்
கரையோர குடிகளையும்
இப்போது வாழ வைக்கும் மண்ணும்
மறைத்துக் கொண்டது

மண் அரிப்பு எனும் அனர்த்தத்தால்
வாழவும் விருப்பமின்றி எழவும் துணிவுமின்றி
நிர்கதியில் நிற்கின்றனர் எம் தமிழர்கள்
தமிழர் எனும் அடையாளம் அழிக்கப்படுகின்றது
ஆடம்பரக் கலாச்சாரத்தால்

அணைக்கும் அன்னை அழிக்கத் துடிக்கின்றாள்
அகதியாய் நிற்கும் தமிழர்களை
கையேந்தி நிற்கின்றோம் வேறு வழியின்றி
தாயே அழித்திட நினைத்தால்
முழுதாய் அழித்திடு
அனு அனுவாய் அழிக்காதே அழுவதற்கும்
கண்ணீரில்லை காய்ந்துவிட்டது காலப்போக்கில்

சமாதானம் பேச்சில் மட்டும் உண்டு
வாழ்வில் இல்லை
சுதந்திரமும், சமத்துவமும் இல்லை
சொந்த நாட்டில்,
தர்மத்தின் கைதிகள் அங்கே சிறைவாசம்
அவர்களின் உறவுகள் இங்கே வனவாசம்
புதிராய் தொடரும் இவ் முடிவில்லாப் பயணங்கள்
எப்போது முடியுமோ...?

# எதிர்கால சிற்பிகளே!

இளைஞனே எழு!
விழியோடும் வலியோடு போராடு
இளைய சமுதாயமே விழித்தெழு
ஒரு விந்தை உலகை - நீ
செதுக்கிவிடு ஓர் சிற்பியாய்

மதிமயங்கி தன் நிலை
மறந்துவிடாதே - மது மோகத்தால்
வன்முறை என்னும் வஸ்திரம் ஏந்தி
மனித மாண்பின்றி மனிதனை அழிக்கின்றாயே

விழிகளை அகலத்திற
உனக்கென்று எதிர்காலம் உண்டு
எதிர்கால சிற்பிகளே
எதிர்த்து நில் துன்பங்களை
முகப்புத்தகத்தை தள்ளிவிட்டு
புத்தகத்திற்குள் உலா வா
விடியும் விடியல் உனக்கானது
புலரும் பொழுது உன்னுடையது

படைப்பின் சிகரங்களே
சிதைக்காதீர்கள் உங்கள் வாழ்க்கையை
நாளைய தலைவர்களே
கானலாக்காதீர்கள் உங்கள் எதிர்காலத்தை



புவஸ்ரினா.மெ

இனியாவது தொடரட்டும்
உன் பயணம் இனிதாய்
உன்னை எதிர்பார்க்கின்றது உலகம்
வீறு கொண்டு வெற்றியை உனதாக்கு

பல்லக்கு மீது பவனியா?
முள்ளின் மீது பயணமா?
எழுதுகோல் உன்னிடம்
எழுதிவிடு உன் சரித்திரத்தை
உளி உன் கையில்
உருவாக்கிவிடு - நீ
ஒரு சிற்பியாய்



(ஒளியரசி
டிசம்பர் 2015)

# காலத்தின் வேகம்

மனிதா!
உணர்ந்து கொள்
கருவறையிலிருந்து வந்த நீ
கல்லறையில் அடக்கப்படுவாய்
என்பதை

நேற்று முடிந்து விட்டது
நாளை வந்து கொண்டுள்ளது
இன்று வாழ்வை வாழ்ந்து விட்டாயா?

இருளை அகற்றிட
சிறு அகல்
துன்பத்தை அகற்றிட
ஒரு விடியல்

ஆறாத வலிகளை ஆறாக பாயவைக்கிறது
விழிகள்
உணர்வுகளுக்கு வரம்பிட்டு
ஊமையாகிக் கிடக்கும்
உறவுகள்
இரவுகள் தூக்கம் முறிக்கின்றது
இமைகள் மூட மறுக்கின்றது
இறந்த கால நினைவுகளால்

விழிகள் உறங்கிய போதும்
விரல்கள் பேனா முனைகளால்
வரைய நினைக்கின்றது
உணர்வுகளை கவிதைத்துளியாக காகிதத்தில்

கடிகார முட்களோடு
ஓர் போராட்டம்
காலத்தின் வேகத்தால்

# நெஞ்சம் பொறுக்குதில்லையே

யாழ் இசைத்து வாங்கினான்
யாழ்ப்பாணத்தை
புண்ணிய பூமியாய் மதிக்கப்பட்ட
இவ் ஊர் - இன்று
கண்ணிகள் புகுக்கப்பட்டு மிதிக்கப்படும்
அபாயக் குரலானது


ஐயகோ...
நெஞ்சம் பொறுக்குதில்லையே
உரிமை குரலுக்காய் உயிர் கொடுத்த
உறவுகளின் உறவுகள் - இன்று
எங்கே செல்கிறது எனத் தெரியவில்லை

போதைவஸ்து எனும் கரும் போர்வைக்குள்
அகப்பட்டு மீள வர மறுக்கும்
மர்மம்...
பெண்களை தெய்வங்களாக பார்த்தவர்கள்
இன்று தேக சுகத்திற்காய்
தேடும் அவலம்

தமிழன் தன் நிலை மறந்தான்
இன்று எங்கு என்று
முகப்புத்தகத்தில் தன்னை முழுவதும்
இழக்கும் மனிதம்
வலைப் பூக்களில் வாழ்க்கை
தொலைக்கும் வண்ணம் இங்கே!

கலாச்சாரம் கானலாக்கப்படும்
காலம் - இன்று
நாகரீகம் அநாகரீகமாக்கப்படும்
புதிய பண்பாட்டு கலாச்சாரம்
கணைகளாகும் காதல்கள்
சுமைகளாகும் குழந்தைகள்
குமுறும் பெற்றோர்கள்

படித்துப்பட்டம் பெற்றான் கல்விமான்
அன்று; - இன்று
குடித்து பட்டம் பெறுகின்றான்
குடிகாரன் என்று




வன்முறைகளை உண்டாக்கும்
பத்திரிகைகள்
வன்முறையாக மாற்றப்படும்
சினிமா மோகங்கள்
திட்டமிட்டு நடக்கும்
கலாச்சாரச் சீரழிவுகள்
கல்வியை கானலாக்க நடக்கும்
போதைவஸ்து விநியோகம்

ஆயுதப் போராட்டம்
முடிந்துவிட்டது
இவ் அடிமை போராட்டம்
எப்போது முடியுமோ!

Printed by : Mathi Colours Nallur 021 2229285